Formatted

**செய்தி வெளியீடு :712** **29.8.2008**

**கோயம்பேடு, அருள்மிகு குறுங்காலீஸ்வரர் கோயிலில் இராஜ கோபுரம் கட்டும் பணி துவக்கம்**

**மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் துவக்கி வைக்கின்றார்கள்.**

மிகப்பழமைவாய்ந்த கோயம்பேடு, அருள்மிகு குறுங்காலீஸ்வரர் கோயிலில் ஏழு நிலை இராஜ கோபுரம் கட்டும் பணிக்கான துவக்க விழா செப்டம்பர்–1 காலை 9.15 மணியளவில் நடைபெற உள்ளது.

பிரார்த்தனை தலம்

இக்கோயிலின் மூலவர் சிவலிங்கம் 2000 ஆண்டுகளுக்கு முன் சுயம்புவாக தோன்றியதும், இராமபிரானின் புதல்வர்கள் இலவகுசலர்கள் வழிபட்ட சிவலிங்கமும் ஆகும். வால்மீகி முனிவர் ஆசிரமம் அமைத்து தவம் இருந்த இடம் இத்தலம். பல்லவ, சோழ, விஜய நகர மன்னர்கள் திருப்பணி செய்து தான தர்மங்கள் வழங்கியதற்கான 14 கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளது. அருணகிரிநாதர் பாடல்பெற்ற தலமும், சரபேஸ்வரர் நரசிம்ம அவதாரத்தின் உக்கிரமத்தை ஆலிங்கனம் செய்து சாந்தப்படுத்திய இடமும் சரபேஸ்வரர் வழிபாட்டு பெருமையுடைய கோயிலும் ஆகும். இக்கோயில் வழிபாட்டில் எதிரிகள் அழிவதோடு பிறவிப் பிணியும், பாவமும், குற்றமும் போக்கக்கூடிய கோயிலாகவும், பிரிந்தவர்கள் ஒன்றுகூட செய்யும் பிரார்த்தனை தலமாகவும் விளங்குகிறது.

அரசு அறிவிப்பு

சோழ மன்னர் குலோத்துங்கசோழன் காலத்தில் கருங்கள் திருப்பணி செய்தபோது இராஜ கோபுர பணி நின்றுபோனதாக குறிப்பிடுவதில் பக்தர்கள் வேண்டுகோள்விடுத்ததை தமிழக அரசு ஏற்று 2008 மார்ச் மாதத்தில் சட்டமன்றத்தில் இராஜ கோபுரம் கட்ட அறிவிப்பு வெளியிட்டது. அதன்படி நின்றுபோன இராஜ கோபுர பணியை துவக்க மண் பரிசோதனை செய்ததில் பழைய நுழைவாயில் கல்கார மண்டபத்தை பிரித்து புதிதாக கட்டிடம் கட்ட அறிவுரை வழங்கியவாறு ரூ.81 இலட்சம் மதிப்பீட்டில் ஏழு நிலை இராஜ கோபுரம் கட்ட முடிவு செய்யப்பட்டது.

சிறப்பு பூஜை

இராஜ கோபுரம் கட்டும் பணிக்காக சிறப்பு பூஜையாக ஆகஸ்டு–31 அன்று கணபதி ஹோமம், நவகிரக ஹோமத்துடன் பூர்வாங்க பூஜைகள் செய்து மாலை யாகசாலை பூஜை துவக்கி பூர்ணாஹுதி விசேட தீபாராதனைகளுடன் முடித்து பிரசாதம் வழங்கப்படுகிறது. செப்டம்பர்–1 அன்று காலை 2–ம் கால யாகசாலை பூஜை துவங்கி மகா பூர்ணாஹுதியுடன் முடித்து இராஜ கோபுர பாலாலயம் செய்யப்படுகிறது.

<u>ஏழு நிலை இராஜ கோபுர பணி துவக்கம்</u>

முற்றிலும் பக்தர்கள் நன்கொடையைக்கொண்டு கட்டப்படும். இராஜ கோபுரம் கட்டும் பணிக்காக துவக்கமாக அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டி திருப்பணியை துவக்கி வைக்கிறார்கள். வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ப.ரங்கநாதன் அவர்கள் முன்னிலை வகிக்கிறார். அறநிலையத்துறை அரசு செயலாளர் திரு.க.முத்துசாமி,இ.ஆ.ப, முதன்மை செயலர்/ஆணையர் திரு.த.பிச்சாண்டி,இ.ஆ.ப, அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.தி.ஜெயராமன், திரு.த.சுந்தரம், திருமதி.சி.ஹரிப்ரியா கலந்துகொள்கின்றனர். இராஜ கோபுர திருப்பணிக்கு பொதுமக்கள் நன்கொடை அளிக்க வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது.

<u>வைகுண்டவாசப் பெருமாள் கோயில் திருப்பணி துவக்கம்</u>

பெரிய காடாக 2000 ஆண்டுகளுக்கு முன் இருந்த இடத்தில் வால்மீகி முனிவர் ஆசிரமம் அமைத்து தலம் இருந்ததும், கர்பவதியான சீதாபிராட்டியார் இலவகுசலர்களை பெற்றெடுத்த இடமும், ராமபிரானுடன் சீதாதேவி இலவகுசலர்கள் ஒன்றுகூடிய இடமும், விகனச முனிவர், வால்மீகி முனிவர் இலவகுசலர்களுக்கு நேரடியாக பெருமாள் காட்சி அளித்த இடமும் ஆன கோயம்பேடு வைகுண்டவாசப் பெருமாள் கோயில் திருப்பணி 12 ஆண்டுகளுக்கு பிறகு செப்டம்பர்–1 அன்று பாலாலயத்துடன் திருப்பணி துவக்கப்படுகிறது. இதற்கான யாகசாலை பூஜைகள் ஆகஸ்டு–31 மற்றும் செப்டம்பர் 1–ல் நடைபெறுகிறது. ஆகஸ்டு 31 அன்று மூலவர் பெருமாள், தாயார், ஆண்டாள், கலாகர்ஷனம் செய்து திரை போடப்படுகிறது. மீண்டும், திருப்பணி முடிந்து சம்ரோட்சணை அன்று தான் பொதுமக்கள் தரிசனத்திற்கு திறக்கப்படுகிறது.

ரூ.20 இலட்சம் மதிப்பில் பக்தர்கள் நன்கொடையைக் கொண்டு திருப்பணியை துவக்கப்பட உள்ளதற்கு அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கின்றார்கள்.

விழாவிற்கான ஏற்பாடுகளை தக்கார்/துணை ஆணையர் பி.வாசுநாதன், கோயில் நிர்வாக அதிகாரி த.மோகனசுந்தரம் செய்துள்ளனர்.

***

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**